<u>**Sub Court, Eraniel**</u>

**O.S. No.64/2023**
Date: 29.10.2024.
வா.சா.1 - திருமதி. செல்ல நாடாச்சி.
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி</u>

நான் 5ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் தமிழிலும் ஆங்கிலத்திலும் கையெழுத்து செய்வேன். எனக்கு 3 பிள்ளைகள். எனக்கு வேலை கிடையாது. முன்னால் விவசாய கூலிவேலைக்கு சென்று கொணடிருந்தேன். எனக்கு திருமணம் நடந்த வருடம் நினைவில் இல்லை. எனது மூத்த மகன் செல்வின், 2 வது மகன் மணிகண்டன், 3 வது மகள் அனிதா. அனிதாவை நான் வட்டக்கோட்டை, லீபுரம் பக்கம் திருமணம் செய்து கொடுத்திருக்கிறேன். எனது மகன் மணிகண்டன் ஐ.டி.ஐ படித்திருந்தார். AC மெக்கானிக் வேலை செய்து வந்தார். எந்த வருடம் ஐ.டி.ஐ படித்தார் என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. சுமார் 20 வருடங்களுக்கு முன்னால் அவர் வேலைக்குச் சென்று விட்டார். தங்க சொர்ணம் என்பது எனது கணவரின் தம்பி. 2006 ல் எனது மகன் மணிகண்டன் சென்னையில் AC மெக்கானிக்காக வேலை பார்த்தார். அவருடைய சம்பாத்தியத்தில் தான், தங்க சொர்ணத்திடமிருந்து, மணிகண்டன் 2.2 செண்ட் வீடு மற்றும் மனையை விலைக் கிரயம் வாங்கி எனது பெயரில் பதிவு செய்தார் என்றால், சரியல்ல. நான் தான் கிரயம் வாங்கினேன். எனது மாமியார் பெயர் பாக்கியம் நாடாச்சி. அவர் கடந்த 03.04.1974 அன்று எனது பெயரில் ஒரு தானப்பத்திரம் எழுதி தந்தார் என்றால், சரிதான். அதில் என் கணவருக்கு 2.2 செண்ட் இடம் பாத்தியம் இருந்தது. அந்த மொத்தம் 4.4 செண்டை தொட்டு சமாதிக்கு பொதுவாக இடம் ஒதுக்கப்பட்டு இருந்து என்றால், சரிதான். இந்த மொத்தம் 4.4 செண்டில், எனது 2 மகன்களுக்கும் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் நான் எழுதி வைத்தேன் என்றால், சரிதான். செல்வின் பெயரில் எழுதிக் கொடுத்த அந்தப் பத்திரம் இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.4777/2011 ஆக பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். அதே தேதியில் மணிகண்டன் பெயருக்கு 4776/2011 ஆக ஆவணம் வா.சா.ஆ.2 பதிவு செய்யப்பட்டது என்றால், சரிதான். அந்த இடத்தில் .540 சதுர லிங்ஸ் வாகனம் நிறுத்துவதற்கு ஒதுக்கி இருந்தோம் என்றால், சரிதான். நான் அந்த இடத்தை என் மகன்களுக்கு எழுதிக் கொடுத்த போது அந்த இடத்தில் ஒரு பழைய ஓட்டு வீடு இருந்தது. 2012 ல் மணிகண்டன் அங்கு புதிய வீடு கட்டினார். அதன் கதவு எண்.27–151A. நுள்ளிவிளை

பஞ்சாயத்து என்றால், சரிதான். அந்த வீட்டில் தான் நான் தற்போது தாமசித்து வருகிறேன் என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி மற்றும் எனது மணிகண்டனின் திருமணம் கடந்த 25.03.2012 அன்று நடந்தது. அது நாங்கள் பெரியவர்கள் பேசி ஏற்பாடு செய்த திருமணம் தான். திருமணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு இந்த சம்மந்தம் பற்றி எனக்கு தெரிய வந்தது. 14.10.2013 தேதியில் 2வது பிரதிவாதி ஹர்ஷா பிறந்தார். 2014 ல் எனது மகன் மணிகண்டனுக்கு உடல்நிலை சரியில்லை என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. அதற்கு 1ம் பிரதிவாதி சென்னையில் அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை செய்தார் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. மணிகண்டன் இறப்பதற்கு 3 வருடங்களுக்கு முன்பு தான் அவருக்கு உடல்நிலை சரியில்லாத விபரம் எனக்குத் தெரிய வந்தது. 2014 முதல் 2017 வரை அவர் என்ன சிகிச்சை மற்றும் அதற்கான செலவுகள் பற்றிய விபரம் எனக்குத் தெரியாது என்றால், அவன் சம்பாத்தியம் இருந்தது. இந்த விபரத்திற்கு ஆதரவாக நான் ஆவணங்களை பார்த்திருக்கிறேன். அந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது. அவை 1ம் பிரதிவாதியின் கைவசம் உள்ளது. எனது மகனுக்கு வங்கிக் கணக்குகள், பாஸ்புத்தகம் மற்றும் ATM Card பற்றிய விபரங்கள் எனக்குத் தெரியாது. 2012 முதல் 2020 வரை எனக்கும் எனது மருமகள் நிஷாவுக்கும் மனவருத்தம் ஏதும் கிடையாது. 2020 ல் எனது மகன் மணிகண்டன் இறந்து விட்டார். அந்த சமயம் சுமார் 4 மாதங்கள் நிஷா என் வீட்டில் தங்கியிருந்தார். அதற்கு பிறகு என் வீட்டில் அவர் தங்குவதில்லை. வந்து செல்வார். நான் நிஷாவிற்கு எந்த விடுதலைப் பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ல் உ ள்ள ஆங்கிலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த பத்திரத்தில் உள்ள புகைப்படம் என்னுடையது தான். அந்த பத்திரத்தை கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் தான் தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். அதில் சாட்சி திருமதி. ஷோபலதா எனது மூத்த மகன் செல்வினின் மனைவி என்றால், சரிதான். 2வது சாட்சி ராம்குமார் என்பவர் யார் என்று எனக்குத் தெரியாது. ராம்குமார் எனக்கு வேண்டியவர் என்றால், சரியல்ல. எனக்கு இரணியல் கிராமத்தில் சொத்துக்கள் ஏதும் கிடையாது. வழக்கு பட்டிகைச் சொத்தில் அயிட்டம் எண்.1 ஆக நான் இரணியல் கிராமத்தில் உள்ள ஒரு சொத்தினை குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். அதன் விஸ்தீரணம் 2 1/2 செண்ட் ஆகும். லீபுரம் கிராமத்தில் உள்ள எனது சொத்தை தொட்டு எனது மகள் அனிதாவிற்கு சொத்து உள்ளது என்றால், சரிதான். இலவச மின்சாரம் வாங்குவதற்காக எனது மகன் மணிகண்டன் 18 1/4 செண்டை

அனிதாவிற்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார். அதன் பிறகு 2017 ல் அனிதா அந்த சொத்தினை மீண்டும் மணிகண்டனுக்கே திருப்பி செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்து விட்டார். அவ்வாறு சொத்தினை திரும்பி வாங்கிய காரணத்தினால் அனிதா விரோதம் கொண்டு, அவருடைய தூண்டுதலின் பேரில் நான் இந்த வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல. நான் கூட்டு அவகாச விடுதலைப் பத்திரத்தை எழுதிக் கொடுப்பதற்காக ரூ.7,00,000/- 1ம் பிரதிவாதியிடமிருந்து பெற்றுக் கொண்டு, முத்திரைத்தாள் ரூ.42,020/- ற்கு வாங்கியும் பதிவு கட்டணத்தை செலுத்தியும், எழுத்தர் செலவுகள் ஆகியவற்றையும் செலுத்தி வா.சா.ஆ.5 பதிவு செய்யப்பட்டது என்றால், சரியல்ல. அந்த விடுதலைப் பத்திரம் பதிவு செய்ய நானும் எனது முதல் மருமகள் ஷோபலதா மற்றும் ராம்குமார் ஆகியோர் சென்று பத்திரப்பதிவு செய்தோம் என்றால், 1ம் பிரதிவாதி வந்திருந்தார். ரூ.2,000/-க்கு கூட்டிச் சென்றார். 1ம் பிரதிவாதி வரவில்லை என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் மற்றும் பிராதில் உள்ள விபரங்களை நான் சொல்லித் தான் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால், சரிதான். அதில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலம் மற்றும் பிராதில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் முன்னுக்பின் முரணாக உள்ளது என்றால், சரியல்ல. என்னை 1ம் பிரதிவாதி ஏமாற்றிவிட்டார் என்ற விபரத்தை நான் முதல் முதலாக எப்போது யாரிடம் சொன்னேன் என்றால், எனது வழக்கறிஞருக்குத் தான் தெரியும்.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.